[1974 மார்ச் 20

கீழ்ராங்கியம் கிராமம்

* 519 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ராங்கியம் கிராமத்தை வெள்ளி விழா கிராமமாக எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அங்கு பள்ளிக்கூடம் கட்டும் திட்டம் ஏதேனும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) பள்ளிக்கட்டிடம் கட்டும் பணி, 1973-74-ல் கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

Tanks near Nidamangalam

* 520 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of fish were killed due to poisoning of the tank waters at Edakizhayur and Kallumangalam near Nidamangalam in Thanjavur district about the 25th March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 24—3—1973 அன்று ஏரியில் 'ஸ்டார்டின்' என்ற நச்சு மருந்து கலந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இதன் விளைவாக மீன்கள் இறந்து காணப்பட்டன. வடுவூர் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரால் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை செய்யப்பட்டு, சப்-மாஜிஸ்டிரேட் இது சம்பந்தமாக மூவருக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

திரு. என். டென்னிஸ் : இவ்வித சம்பவங்கள் ஏற்படாதவாறு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

1974 மார்ச் 20]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்படி ஏரிகளிலும் குளங்களிலும் ஏதோ விரோதத்தின் காரணமாக இப்படிப்பட்ட செயல்கள் நடந்து விடுகின்றன. அப்படி ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: மேட்டூர் அருகில் உள்ள ரசாயன தொழிற்சாலைக் கழிவு நீர் வருவதன் மூலம் இம்மாதிரி மீன்கள் செத்துவிடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு மீன்கள் சாகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எனக்கு அது பற்றிய தகவல் வரவில்லை. அதுபற்றிய தகவல்கள் வருமானால் மீன் இலாகாவைப் பரிபாலிக்கும் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிக் கவனம் செலுத்துவார்கள்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

*** 521 வினா—திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தொழிலாளர்கட்கு வீடு கட்டித்தர அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மேட்டுப்பாளையம் தொகுதியில் மேட்டுப்பாளையம் அருகில் உள்ள காரமடை என்ற ஊரில் இராமகிருஷ்ண தொழிலகத்திலும், இராஜலெட்சுமி ஆலையிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக 60 குடியிருப்புக்கள் கட்டுவதற்கான ஒரு திட்டம் ரூ. 5.51 லட்சம் மதிப்பில் 27—10—1972 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கோரும்போது அரசு இத்திட்டத்தினைப் பரிசீலிக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: இம்மாதிரி வீடு கட்டுவதற்கான நடவடிக்கையில் தொழிற்சாலை நிர்வாகத்திற்குப் பங்கு இருக்கிறதா? இதுபோன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்ட அரசாங்கம் மானியம் கொடுக்கும்